1990 மார்ச் 20]

திருவத்தேவன் அணைக்கட்டு

*3579—திரு. ஆர். சிங்காரம்:
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, திருவத்தேவன் அணைக்கட்டு கட்டுவதில் மிகவும் தாமதம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி திருவத்தேவன் அணைக்கட்டு கட்டுவதில் காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டு ஆரம்பித்து சுமார் 3 ஆண்டுகள் ஆகிறது. இன்னும் அது முடிக்கப்படவில்லை. அதை விரைவாக முடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தக் கேள்வியைத் தொடுத்து இருக்கிறேன். விரைவாக அதை முடிப்பதற்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பணி ஜூன் 1988-ல் துவக்கப்பட்டு ஜூன் 1989-க்குள் சுமார் 60 விழுக்காடுக்கு மேல் பணி முடிக்கப்பட்டு இருக்கிறது, மீதிக் கால்வாய் வெட்டுவதிலே சில நிலப் பிரச்சினைகள் இருப்பதால்தான் தாமதமே தவிர, அதைத் தவிர அந்த நேரத்திற்குள் முடிந்திருக்கும். இருந்தாலும் அரசு வேகமாகச் செயல்படும்.

(9–50 மணி)

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்வதிலேதான் காலதாமதம் ஆகிறது. அதற்கான விரைவான நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்படவில்லை. பலமுறை சொல்லியும்கூட சம்பந்தப்பட்ட அந்த அதிகாரிகள் விரைவான நடவடிக்கையை எடுக்காமல் தாமதித்து வருகிறார்கள். என்னால் முடிந்த அளவிற்கு மேக்சிமம் நானும் அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன், அரசும் துரிதமாக நடவடிக்கை எடுத்து, இதை ஆய்வு செய்து உடனடியாக முடிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மான்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரைவிட அரசு மிக வேகமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.